# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **358/2016**

ஆணை எண். **164/2016**

நாள் : **05/10/2016**

முசுபிரா பேகம்,
**கோயம்புத்தூர் – 641 008.**

**-- முறையீட்டு மனுதாரர்**

மாநகராட்சி ஆணையர்,
**கோயம்புத்தூர் – 641001.**

**-- எதிர் மனுதாரர்**

கோயம்புத்தூர் மாநகராட்சி, குனியமுத்தூர், பிருந்தாவன் வட்டச் சாலை, கிளாசிக் பார்க், 30, எண்ணிட்ட குடியிருப்பில் வசிக்கும் முசுபிரா பேகம் அவர்களின் 26.04.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2016 அன்று பெறப்பட்டு 358/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணைவெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

கோயம்புத்தூர் மாநகராட்சி, குனியமுத்தூர், பிருந்தாவன் வட்டச் சாலை, கிளாசிக் பார்க், 30, எண்ணிட்ட குடியிருப்பில் வசிக்கும் முசுபிரா பேகம் அவர்கள் 17.12.2015 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.182–ல் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நடுத்தர நிலையில் (middle level) தகுதியுடைய அதிகாரிகளை (Competent Authority) நியமிக்கும் பொருட்டு 37 சுகாதார அலுவலர் (Sanitary Officers) பணியிடங்கள் ஒட்டுமொத்தமாக 9 மாநகராட்சிகளுக்கு தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், சுகாதார ஆய்வாளர்களாகப் பணியாற்றும் அலுவலர்களுக்கு நிலை உயர்வு வழங்கி (By upgrading) மேற்படி பணியிடத்தில் பணியமர்வு செய்யப்படுவர், என்றும் ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேற்படி அரசாணையில் நடுத்தர நிலை அதிகாரி (middle level Authority) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சுகாதார அலுவலர் (Sanitary Officer) பணியிடம் வகுப்பு–2 பணியிடத்தில் அமையும் எனவும் தனது ஊகத்தை தெரிவித்துள்ளார். எனவே, 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், பிரிவு106(2)(b)ன் படி, மேற்படி பணியிடத்தில் மன்ற ஒப்புதல் பெற்றே பணி நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் ஆனால், கோயம்புத்தூர் மாநகராட்சியில் சுகாதார அலுவலர் பணியிடங்கள் மன்ற ஒப்புதல் பெறாமல் நியமனக்குழு மூலம் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக மாநகராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் உரிய ஆணை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சுகாதார அலுவலர் பணிக்கான சம்பள விகிதம் ரூ.9300–34800+GP4500 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பொதுப்பணி விதிகளின் படி ரூ.9300–34800+ GP 4800

என்ற சம்பள விகிதத்தில் உள்ள மேலாளர் பணியிடம் வகுப்பு–3 பணியிடத்தில் உள்ளது என்றும், அப்பணியிடத்திற்கான நியமனம், நியமனக்குழு மூலமே பணி அமர்வு செய்யப்படுகின்றது என்றும், தர ஊதியம் (Grade Pay) குறைவாக உள்ள சுகாதார அலுவலர் பணியிடத்திற்கான தரம் (Class) குறித்து பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட அரசு ஆணையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, சுகாதார அலுவலர் பணியிடம், தரம்–2ல் இணைத்து பணி விதிகள் வெளியிடும் நிலையில் மன்ற ஒப்புதல் பெற்று நியமனம் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மாநகராட்சிகளில் சுகாதார அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிப்பு மற்றும் நியமனம் முறை சம்பந்தமாக நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் அவர்களின் கருத்தும் பெறப்பட்டது. மேற்படி சுகாதார அலுவலர் பணியிடத்திற்கான பணி விதிகள் தோற்றுவிக்கும் பொருட்டு வரைவு விதிகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவை அரசின் பரிசீலனையில் உள்ளன என்று நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும் 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதார சார்பணியாளர்களுக்கான பணிவிதிகளில் விதி–2–ல் உரிய திருத்தம் மேற்கொள்வதற்கு அரசுக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்பின் நகலையும் தாக்கல் செய்துள்ளார். சுகதார அலுவலர் பணியிடத்தின் வகை குறித்து அரசு எந்தவித ஆணையும் வெளியிடாத நிலையில், மனுதாரர் ஊகத்தின் அடிப்படையில் மேற்படி சுகாதார அலுவலர் பணியிடம் வகை–2ல் அமையும் என்றும் அப்பணிக்கான நியமனங்கள் மன்ற ஒப்புதல் பெற்றே மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவிப்பது ஏற்புடையதல்ல.

மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, 26.07.2016 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 22.07.2016 நாளிட்ட கடிதத்தில் தன்னால் விசாரணைக்கு வர இயலாது என்றும், தான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்து மனுதாரர் விசாரணைக்கு வரவில்லை. மனுதாரரின் இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. மனுதாரரின் விருப்பத்திற்கேற்ப இம்முறைமன்ற நடுவம் செயல்பட இயலாது எனினும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் அவர்கள் விசாரணையின்போது தெரிவித்த கருத்துக்களை பரிசீலனை செய்ததில், கோயம்புத்தூர் மாநகராட்.யில் பணி நியமனக்குழு மூலம் சுகாதார ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கி புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சுகாதார அலுவலர் பணியிடத்தில் பணியமர்வு செய்ததில் எந்தவித முறைகேடுகளோ அல்லது விதி மீறல்களோ இல்லை எனக்கருதி, மனுதாரரின் முறையீட்டை ஏற்பதற்கில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

முகபிரா பேகம்,
எண்.30, கிளாசிக் பார்க்,
பிருந்தாவன் வட்ட சாலை,
குனியமுத்தூர்,
கோயம்புத்தூர் – 641 008,

மாநகராட்சி ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் – 641 008.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.